# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்)

**ரதனதிஸ்ஸ சமாதான மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*குருணாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ யூ. கே. சுமித் உடுகும்புர அவர்களால் 2021, சனவரி மாதம் 20 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, சனவரி மாதம் 11 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ **23 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 17.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்)

### ரதனதிஸ்ஸ சமாதான மன்றத்தைக்கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

“ரதனதிஸ்ஸ சமாதான மன்றம்” என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

ரதனதிஸ்ஸ சமாதான மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ரதனதிஸ்ஸ சமாதான மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கு அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும் “ரதனதிஸ்ஸ சமாதான மன்றம்” என்னும் பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருத்தலும் வேண்டுமென்பதோடு அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத்

தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம் என்பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன்விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) மதம் தொடர்பான முக்கியத்துவமான இடங்களுக்கு உதவுதல்;

(ஆ) பிரிவெனாக்களுக்கு உதவுதல்;

(இ) தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தல்;

(ஈ) இனம், மதம், குலபேதமின்றி கல்வி, மத, கலாசார, கலைசார் மற்றும் விளையாட்டு வசதிகளின் அபிவிருத்தியில் உதவுதல்;

(உ) இறைச்சிக்காகக் கொல்லப்படவிருக்கும் மாடுகளை விடுவித்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்து நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய முகாமைத்துவக் குழுவொன்றினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைவாக முகாமைசெய்யப்படுதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபக உறுப்பினரான தேசமான்ய வண. எரியாவே ரதன திஸ்ஸ தேரர் பணிப்பாளர் சபையின் ஆயுட்கால தவிசாளராதல் வேண்டும்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைத்துவக் குழுவானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.*

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல் மற்றும் மூடுதல், பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ பணம் கடனாகப் பெறுதல் அல்லது பெற்றுக்கொள்ளல், அன்பளிப்புகள் மற்றும் நன்கொடைகள் பெற்றுக்கொள்ளல் அல்லது சேகரித்தல், கூட்டுத்தாபனத்தின் நிதியத்தை முதலீடு செய்தல் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆட்களையும் அலுவலர்களையும், சேவையாளர்களையும் சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் சேவையிலிருந்து நீக்குதல் உள்ளடங்கலாக கூட்டுத்தாபனத்தின் சகல குறிக்கோள்கள் அல்லது அவற்றுள் சில குறிக்கோள்களையாவது நிறைவேற்றுவதற்கு அல்லது அடைந்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள், நடவடிக்கைகளை நிறைவேற்றல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்குமான தத்துவமும் கூட்டுத்தாபனத்துக்கு உண்டு.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. *(1)* ஏதேனும் பொதுக்கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்காகவும் இச் சட்டத்தினதோ அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

*(அ)* உறுப்பாண்மை வகைப்படுத்தலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், அகற்றுதலும் விலக்குதலும் அல்லது மீளப்பெறுதலும்;

*(ஆ)* பதவிதாங்குனர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவி நீங்குதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களது தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும்;

(இ) முகாமைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும், அதன் தத்துவங்களும், நடத்தையும் மற்றும் கடமைகளும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழுவின் அல்லது ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களின் நேரம், இடங்கள், கூட்டம் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரலும் அக்கூட்ட நடப்பெண்ணும் அதன் அலுவல்களை கொண்டுநடாத்துதலும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்களும் நடத்தைகளும், கடமைகளும், பணிகளும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் மற்றும் முகாமைசெய்தலும்; அத்துடன்

(எ) கூட்டுத்தாபன அலுவல்களை முகாமைசெய்வதற்கும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒன்று ஆக்கப்படுவதைப்போன்று அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படற்பாலனவும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

**8.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்திற்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக்கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாப னத்தினது வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**9.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, சந்தாப்பணம், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாப னத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**10.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது: ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும்.

கலைக்கப்பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும், கணக்காய்வும்.

**11.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதி ஆண்டு ஒரு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஏனைய எல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது அரசியலமைப்பின் 154 இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,

(அ) இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக உள்ளவரும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப் பட்ட தொழில்புரிவதற்கான தகைமைச் சான்றிதழ் வைத்திருப்பவருமாகிய ஆளொருவர் ; அல்லது

(ஆ) இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிதழைக் கொண்டி ருக்கின்றவர்களுமான பங்காளர்களைக் கொண்ட கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத் தின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது என்பதுடன் அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின் றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.